1994 மே 5]

முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் பூண்டி மாதா திருக்கோயிலுக்கு பேருந்துகளை சென்னையிலிருந்து விட வேண்டும் என்று கேட்டபோது, அதனை விட்டு இருப்பதற்காக அந்தப் பகுதி மக்கள் சார்பாக என்னுடைய பணிவார்ந்த நன்றிகளை நாங்கள் உங்களிடத்திலே தெரிவித்துக் கொண்டு, கும்பகோணம் பகுதியிலே இதைப் போன்ற எரிவாயுவை வைத்து பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதனை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியை அந்த மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கும்பகோணத்திலே அதுபோன்ற எரி வாயுவை வைத்து பேருந்துகளை இயக்க முடியுமா என்று கேட்டு இருக்கிறார்கள். நரிமணத்திற்கு அருகாமையில் இருக்கிற பணிமனையிலேதான் நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் தொலை தூரத்திலேயும் அதைக் கொண்டுவருவதற்கு டிரான்ஸ்போர்ட் வசதிகள் மற்றும் இருக்கின்ற பல்வேறு வசதிகள் தேவைப்படுகிறது. சிலிண்டர் காஸ், மற்றும் அதற்கான டேங்கர்கள் வேண்டி இருக்கின்றது. பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினாலேதான் போக்குவரத்துக் கழகத்திலே ஒன்றன் பின் ஒன்றாக இதை இயக்குவதற்கு எப்படி சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை ஆய்ந்ததற்குப் பிறகு உங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 525, திரு. கா. பூ. முனுசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

525—

போக்குவரத்துக் கழகப் போராட்டங்களில் கலந்துகொள்ளதோருக்கு பரிசு வழங்குதல்.

*25113—திரு. கா. பூ. முனுசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் போராட்டத்தில் ஈடுபடாதவர்களுக்கு மட்டுமே போராட்டத்தில் கலந்து கொள்ளாமைக்கான பரிசு (Strike Free Award) வழங்க அரசு வழிவகை செய்யுமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். ஏற்கனவே சில திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

(ஆ) பொங்கல் பரிசாக ஒவ்வொரு ஆண்டும் செயல்திறன் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. வன்முறையில் ஈடுபட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களுக்கு இத்தொகை வழங்கப்படுவதில்லை. இருப்பினும் இவ்வருடம், சென்ற வருடம் வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கப்பட்டது.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற நேரத்தில், சில அரசியல்கட்சிகள் அரசியல்ஆதாயம் தேடபோராட்டத்தை உருவாக்கி அந்த ஆதாயத்தை பல கட்சிகள் தேடிக்கொண்டு இருக்கின்றன. அதுபோன்ற போராட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு இதுபோன்ற பரிசுத் தொகை வழங்குவது, போராட்டத்திலே ஈடுபடாமல் தங்களுடைய பணியை சிரத்தையோடு செய்பவர்களுக்கு, அவர்களுடைய மனம் வேதனைப்படுகின்ற நிலைமை உருவாகிறது. எனவே, இதைத் தவிர்த்து, அரசு கொடுக்கிற சலுகைகளை ஏற்று மக்களுக்காகத் தொண்டு செய்கிற பணியாளர்களுக்கு மட்டும் கொடுக்கிற நிலையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற நிலைதான் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தது, ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அது மாற்றப்பட்டிருக்கிறது. மாற்றியதற்குக் காரணம் பேச்சுவார்த்தை நடக்கிறபோது, தொழிலாளர்கள் அந்தக் கோரிக்கையை வைக்கிறபோது அந்தக் கோரிக்கையை அப்போதிருந்த அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்ட காரணத்தால் தான் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் கூட கொடுக்க வேண்டிய சூழ்நிலை இப்போது நிலவிக் கொண்டிருக்கிறது. அதை மீண்டும் அரசு பரிசீலிக்கும்.

1994 மே 5]

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல் பரிசு கொடுப்பதைப் போலவே போராட்டத்தில் ஈடுபடாத, மக்களுக்கு தொண்டு செய்யக்கூடிய மனப் பக்குவம் உள்ள தொழிலாளர்களுக்கு விசேஷமாக ஏதாவது பாராட்டுப் பத்திரங்களை அரசின் வாயிலாக அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்ட காலத்தில் பேருந்துகளை இயக்கியவர்களுக்குக் கூடுதலாக 25 ரூபாய் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதுவே பாராட்டுதலைப் போலதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்ட காலங்களில் நம்முடைய பேருந்துகளை போக்குவரத்துக் கழகங்களில் மிகச் சிறப்பாக பலபேர் ஓட்டினார்கள். பலபேர் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். அப்படி போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் தியாக உணர்வோடு மக்களுடைய தொண்டர்களாகப் பணியாற்றிய போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கு சிறப்பான முறையில் பதவி உயர்வில் முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவி உயர்வைப் பொறுத்த வரையில் அதற்கு சில வரையறைகள் இருக்கின்றன. காலவரையறை மட்டுமல்லாமல் அவர்களுடைய செயல்திறன் நடவடிக்கை போன்ற பலவற்றையும் ஆய்வு செய்து, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் நடைபெறுகிற அந்த ஆய்வில் அதைப் பரிசீலனை செய்து தான் நாங்கள் அதற்கு முன்னுரிமை வழங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல போராட்டத்தில் கலந்து கொள்ளாதவர்களுக்கு இதுபோன்ற நிலைகள் இருக்கிறபோது அதையும் கருத்திற்கொண்டு, மீண்டும் பரிசீலிக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் அரசுக்கு நல்ல விசுவாசமாக செயல்பட்ட ஊழியர்களுக்கு, டிரைவர், கண்டக்டர்களுக்கு அவர்கள் விரும்புகிற வழித்தடங்களில் பணி செய்வதற்கு முன்னுரிமை அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டத்தில் கலந்து கொள்ளாத ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்குவதோடு மட்டுமல்லாமல், யார் யார் எந்த வழித்தடங்களில் செல்கிறார்களோ டிரைவர்களாக இருந்தாலும், நடத்துனர்களாக இருந்தாலும், அவர்கள் கலெக்‌ஷனையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது புதிய முறையைக் கையாள இருக்கிறோம். சில வழித்தடங்களில் செல்கிறபோது தனியார் வண்டிகள் முந்திச் செல்கிறபோது அவர்கள் பின்னால் செல்கிற சூழ்நிலை ஓரிரு இடங்களில் நிலவி வருகிறது என்பதைக் கருத்திற்கொண்டு, அதிகமான இலாபம் ஈட்டுகிற அந்த வழித்தடங்களில் யார் யார் சிறப்பான முறையில் பணியாற்றுகிறார்களோ, அந்த வழித்தடங்களில் அவர்களுக்குத் தொடர்ந்து பணிகளை வழங்குவதும், இல்லையென்றால் உடனடியாக மாற்றுவதற்கும் நாம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். அந்த நடவடிக்கையின் காரணமாக இதுவும் பரிசிலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் விடுப்பு எடுக்காமல், லீவே எடுக்காமல் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு அரசு ஏதாவது பரிசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று இதுவரையில் இல்லை. உங்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு கேள்வியிலும் உங்களுக்கு துணைக் கேள்வி அனுமதிக்க முடியாது. ஒரு நாளைக்கு ஒரு துணைக் கேள்விதான். வினா எண் 526, திரு. உ. பலராமன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

526—

பெரம்பூர் ஓட்டேரி நல்லாவினை ஆழப்படுத்துதல்.

*14258—திரு. உ. பலராமன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதியில் உள்ள ஓட்டேரி நல்லாவினை ஆழப்படுத்தாதனால் சூளையில் மழைக்காலங்களில்படகு விட வேண்டிய நிலை இருப்பதால், அதனை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?